### கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! எம்.பரமசிவம் வரவேற்புரை!

# கந்தர்வக்கோட்டையில் துணை முதல்வர் பிறந்தநாள் பொதுக்கூட்டம்!

## திண்டுக்கல் ஐ.லியோனி - அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை!

### பெரியண்ணன் அரசு - கவிச்சுடர் கவிதைப்பித்தன் - எம்.எம்.அப்துல்லா- டாக்டர் வை.முத்துராஜா - த.சந்திரசேகரன் பங்கேற்பு!

புதுக்கோட்டை, டிச. 13 - புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கந்தர்வக் கோட்டை தெற்கு ஒன்றிய திமுக மற்றும் இளைஞரணி சார்பாக தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு கந்தர்வக்கோட்டையில் மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (13.12.2025 -சனிக்கிழமை) மாலை 5.00மணியளவில் வெள்ளை முனியன் கோவில் திடல், கந்தர்வக்கோட்டையில் புதுக் கோட்டை வடக்கு மாவட் டக் கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் நடைபெறுகிறது.

கந்தர்வக்கோட்டை தெற்கு ஒன்றிய செயலாளர் எம்.பரமசிவம் வரவேற்புரையாற்றுகிறார் எம்.ராஜா, எம்.தவசுமணி, க.சுப்பிரமணியன், நியூஸ் ராஜேந்திரன், குஞ்சப்பா, ராஜேந்திரன், ரவிச்சந்திரன், ராதிகா கருப்பையா, எஸ்.கோவிந்தன், டி.சரவணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, புதுக் கோட்டை தெற்கு மாவட் டக் கழகச் செயலாளர், இயற்கை வளங்கல் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற் படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்..தாட்கோ தலைவர், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் நா. இளையராஜா, முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் வி.ஆர்.கார்த்திக் தொண்டைமான், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சு.சண்முகம், கந்தர்வக்கோட்டை தொகுதி பொறுப்பாளர் தமிழ் மணவழகன், முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப் துல்லா, முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர்கள் பெரியண்ணன்அரசு கவிச்சுடர் கவிதைபித்தன், டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, அரு.வீரமணி அஞ்சு காமீனாட்சிசுந்தரம், த.சந்திரசேகரன், புதுகை விஜயா, கே.ஆர்.என். போஸ், திலகலதிசெந்தில், வி.என்.மணி, க.மதியழகன் பெ.ராஜேஸ்வரி, எஸ்.எஸ். கருப்பையா, எம்.லியாகத் அலி, சுப.சரவணன், கீரை. தமிழ்ராஜா, செ.அசோ க் பாண்டியன், என்.சாத் தையா, இராசு.சந்தோஷ், ஆர்.செல்லத்துரை, எம். செந்தில்குமார், டாக்டர் செ.குறிஞ்சிவாணன், மு. கலைஞர் கருணாநிதி,

இளஞ்சேரன் முத்து ச் சாமி, விளாப்பட்டி சிவா, அன்சாரி பாசித் சி.ஆர். வி.சித்ரா, மா.தமிழ் அய்யா, வெ.முத்துக்கிரு ஷ் ணன், தவ.பாஞ்சா லன், கே.எஸ்.சந்திரன், தென்னலூர் எம்.பழனியப்பன்,

மு.க.ராமகிருஷ்ணன், சி.சண்முகம், ஆர்.ஆர். சாமிநாதன், ஒ.எஸ்.வெங்கடாசலம், என்.சேட்டு மு.பி.ம.சத்தியசீலன், ஆர். ஆர்.எஸ்.மாரிமுத்து, அ. இளங்குமரன், கே.பி.அய் யப்பன், கோவிந்தராஜன்,

உ.முருகேசன், வை. விஜயக்குமார், பி.அண் ணாத்துரை, எம்.எஸ். ஏ.முகம்மது ரிஷா,

வி.ஆர்.பி.ஆர்.ஆதித்யா துரைராஜா, அப்துல் ரசீது, எம்.ஜானகிராமன் அர்ச்சுணன், தாமரை. குழ.பழனி வேல், வி.கோவிந்தராஜ், மு.ஆறுமுகம், துவார் பாலு, எஸ்.கருணாநிதி, டி.சதீஸ் எம்.எம்.முரு கேசன், அரங்கராஜன், வேறு மயில், மாரிமுத்து பாஸ்கர், பழனிச்சாமி,

எம்.சண்முகபிரபு மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள், செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பிக்கி ன்றனர். முடிவில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் எஸ்.ஆர். கலையரசன் நன்றி கூறுகிறார்.

### ஒன்றிய அரசு – தமிழ்நாடு முழுவதும்

# டிஜிட்டல் வேளாண்மை இயக்கத்தினை முறையாகச் செயல்படுத்துகிறதா?

## மக்களவையில் – தர்மபுரி ஆ.மணி கேள்வி!

புதுடெல்லி, டிச. 13 - தமிழ்நாட்டில் விவசாயிகளுக்கான திட்டங்கள் முறையாக செயல்படுகிறதா? என மக்களவையில் தருமபுரி எம்.பி.ஆ.மணி கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்வி வருமாறு:

தமிழ்நாடு முழுவதும் தருமபுரி மாவட்டம் உட்பட டிஜிட்டல் வேளாண்மை இயக்கத்தினை ஒன்றிய அரசு முறையாக செயல்படுத்தி வருகிறதா?



தருமபுரி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் அடையாள அட்டை, புவியியல் கிராம வரைபடங்கள், டிஜிட்டல் பயிர் கணக்கெடுப்பு (DCS) உள்ளிட்ட பணிகளின் நிலை குறித்த விவரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டத்தில் ரபி 2024-2025 காலத்தில் புவிசார் குறிப்பு மற்றும் டிஜிட்டல் பயிர் கணக்கெடுப்பு(DCS) முடிக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை மற்றும் நிலஅளவை செய்யப்பட்ட நிலங்களின் விபரங்கள் என்ன?

அரசாங்கத்தால் வழங்கப்படும் தொழில் நுட்ப மற்றும் நிதி உதவி, SCA நிதி, PMKISAN னின் நிர்வாக நிதி,கேம்ப் மோட் அணுகு முறை,மற்றும் NeGPA உள்ளிட்ட திட்டங்கள் முறையாக தருமபுரி மாவட்டத்திற்கு சென்றடைந்துள்ளதா? இத்திட்டங்களின் கீழ் தருமபுரி மாவட்டத்திற்கு இதுவரை ஒதுக்கப்பட்டுள்ள தொகையின் விவரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டத்தில் விவசாயிகளின் பதிவேட்டை சரியான நேரத்தில் உருவாக்கி அதனை சரிபார்க்க ஒன்றிய அரசால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு ஒன்றிய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் ராம் நாத் தாக்கூரிடம் மக்களவையில் தருமபுரி எம்.பி.ஆ.மணி கேள்வி எழுப்பினார்.

### முரசொலி முதுநிலை

# பிழைதிருத்துநர் ஜெ.டி.அரசு மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, டிச.13 -

**முரசொலி நாளிதழில் ஆசிரியர் பிரிவில் முதுநிலை பிழைதிருத்துநராக பணி புரிந்து வந்த ஜெ.டி. அரசு அவர்கள் உடல்நலக் குறைவால் 10.12.2025 அன்று இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

**இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-**

முரசொலி முதுநிலை பிழை திருத்துநர் ஜெ.டி.அரசு அவர்கள் உடல்நலக்குறைவால் மறைவுற்றார் என்ற செய்தியறிந்து துயருற்றேன்.

முரசொலி நாளிதழில் 01.04.1980-ஆம் ஆண்டு முதல் பிழைதிருத்துநர் பிரிவில் 40 வருடங்களுக்கு மேலாக ஜெ.டி.அரசு அவர்கள் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பிறகும் தொடர்ந்து ஆசிரியர் பிரிவில் முதுநிலை பிழைதிருத்துநராக திறம்படப் பணியாற்றியவர் என்பதை நான் அறிவேன்.

நான் முரசொலி அலுவலகம் செல்லும் பொழுதெல்லாம் என்னை இன்முகத்தோடு வரவேற்றவர்களுள் ஜெ.டி. அரசு அவர்களும் ஆவார்.

இவருடைய தந்தை சி.என்.ஜெயவேல் அவர்கள் முரசொலி நாளிதழில் 15 வருடங்களுக்கு மேலாக பணியாற்றியவர்.

தந்தை சி.என்.ஜெயவேல் அவர்கள் வழியில் ஜெ.டி. அரசு அவர்களும் முதுநிலை பிழை திருத்துநராக திறம்பட பணியாற்றியவர்.

அவர் உடல்நலம் சரி இல்லாமல் இருந்த நிலையில் மறைவுற்றார் என்ற செய்தி அறிந்து துயருற்றேன்.


அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும், முரசொலி பணி யாளர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### துறையூர் ந.குணசீலன்

### டிசம்பர் 13 (2015)



இளமைக் காலம் தொட்டு கழகத்தில் தீவிரமாகப் பணியாற்றியவர்.

தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையுடன் இறுதிவரை வாழ்ந்தவர்.

1993ஆம் ஆண்டு முதல் திருச்சி மாவட்ட பொறுப்புக் குழு உறுப்பினராகவும், 1997ஆம் ஆண்டு முதல் திருச்சி மாவட்ட துணைச் செயலாளராகவும், 2000ஆம் ஆண்டு முதல் பெரம்பலூர் மாவட்டக் கழகச் செயலாளராகவும், 2005ஆம் ஆண்டு முதல் திருச்சி மாவட்ட துணைச் செயலாளராகவும், 2010ஆம் ஆண்டு முதல் இறுதி வரை பொதுக்குழு உறுப்பினராகவும் கழகத்தில் பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

# வழிபாட்டிற்கான வழக்கு அல்ல –

# வாக்குக்காக நடத்தப்படும் மோசடி வேலை!

சங்கிகள் குடும்பம், தீபம் ஏற்றிட தலித்குடியிருப்புக்கு வருவார்களா? மருதமலைக்கு வா, சுவாமிமலைக்கு வா. திருச்செந்தூருக்கு வா என்றால் வரமாட்டார்கள். ஏன் எனில் அங்கு எல்லாம் மசூதி இல்லை. இஸ்லாமியர்கள் இல்லை. அதனால் அங்கு வர வாய்ப்பு இல்லை. இஸ்லாமியர்களை விரட்டுவதுதானே காவிப் படை வேலை.

தீபம் ஏற்றுவது என்பது கோவில் மரபு மட்டும் தானே. இதற்காக மனு போட்ட 10 பேரையே நீதிபதி ஏற்றச் சொல்வது நியாயமா? அந்த பத்து பேரும் ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே. பிக்காரர்கள்.

மருத்துவமனைக்கு அனுமதி கேட்டால் அனுமதி கொடுத்துவிட்டு. மனு போட்டவரே நோயாளிகளுக்கு ஆப்ரேசன் செய்து கொள்ளலாம் என்றதைப்போல். அந்த 10 பேரையே தீபம் ஏற்றிட நீதிபதி உத்திரவு. போதாக் குறைக்கு நானே பார்வையிட வருவேன் என்கிறார்.

இலங்கைக் கடற்படையில் தமிழ் மீனவர்கள் சுடப்பட்டார்கள் என்றால் நானே நேரில் ஆய்வு செய்யப்போகிறேன் என எந்த நீதிபதியாவது சென்றதுண்டா?

1996-ல் தீர்ப்பு, மசூதிக்கு 75 அடிக்கு தூரமாக உன் வழிபாடை வைத்துக்கொள் என்று தீர்ப்பு வந்தது.

2014-ல் நீதிபதி வேணுகோபால், ஆதாரம் இல்லை என சங்கிகள் மனுவை தள்ளுபடி செய்தார்.

சின்னமாற்றத்துடன் 2017-ல் வந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் கல்யாணி சுந்தரம் பவானி இருவரும் உள்ளூர் மக்கள் ஒத்துப்போகும் போது அந்த மத நல்லிணக்கத்தை ஏன் கெடுக்கவேண்டும் என்று கேட்டார்கள்.

150 ஆண்டுகால தீர்ப்பை மாற்றிட வந்த வழக்கில் ஒருவராக விசாரித்ததே தவறு.

மலையில் தீபம் ஏற்றுவதற்கான நியாயத்தை பேசாமல், கருணாநிதி குடும்பத்தை வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்று எச். இராஜா பேசுகிறபோதே. இது வழிபாட்டிற்கான வழக்கு அல்ல வாக்குக்காக நடத்தப்படும் மோசடி வேலை என்பது புரிகிறதா?

நீதிமன்றம் “காவிரியை திறந்து விடச் சொன்னபோது, கர்நாடக அரசு திறந்துவிடாது மவுனம் காத்ததே. C.1.S.F.. ஐ விட்டு நீதிபதி உத்தரவிட்டு தண்ணீர் திறக்கப்பட்டதா?”

நீதிமன்ற தீர்ப்புப்படி பெண்கள் சபரி மலையை வழிபட உரிமை உண்டு. சங்கிகள் பயப்படாமல் பெண்களை அழைத்துச் சென்று வழிபட்டு வருவார்களா?

நில அளவைக்கல்லில் 150 ஆண்டு காலமாக தீபத்தை ஏற்றாமல் இந்த ஆண்டு மட்டும் ஏற்ற வருவது ஏன்?

100 ஆண்டு காலமாக இந்த ஆர். எஸ்.எஸ். சங்க் பரிவாரக் கூட்டம் சிந்திக்காத. குறுக்கு வழிச் சித்தாந்தத்தை நீதிபதி சுவாமிநாதன் சிந்தித்து செயல்பட்டு இருக்கிறார்.

இதே தீர்ப்பை ஒரு மாதம் முன்பே போட்டு இருந்தால். பாதிக்கப்பட்டவர்கள் உச்ச நீதிமன்றம் சென்று தடை வாங்கி விடுவார்கள் என்பதால் 24 மணி நேரத்துக்கு முன் நீதிபதி உத்தரவிடுகிறார்.

பெரிய திருப்பம் என்னவென்றால் ஆளுநர் ரவி, தமிழ்நாடு அரசு எழுதி தந்த உரையை படிக்காமல் வெட்டியும், சேர்த்தும் படிக்கிறார். தளபதி எழுந்து. ஆளுநர் படித்தது சபைக்குறிப்பில் ஏறாது, அது நீக்கப்படும். நாங்கள் எழுதி தந்த உரையே சபைக்குறிப்பில் ஏறும் என்று சொன்ன உடன். தேசிய கீதத்தையே அவமானம் செய்து ஓடினார் ஆளுநர் ரவி.

அதேபோல், குறுக்கு வழியில் மிரட்டிய சுவாமிநாதன் நீதிபதிக்கு தெரியாது. 144 தடை உத்தரவை போட்டு வந்த பத்துபேரையும் நொந்து போகச் செய்ததுடன், ஓடோடி ஒளிந்து கொண்டனர். அவர்களை காவல்துறை விரட்டியதை மக்கள் கைதட்டி சிரித்து வரவேற்றனர்.

“கடையை சாத்து, கடையை சாத்து” என்று இந்து முன்னணியினர் காலில் விழுந்து கதறியபோதும், கடைகள் திறந்தே இருந்தன. மக்கள் அரசுக்கு ஆதா தந்தனர்.

சுவாமிநாதன் தீர்ப்பு நடைமுறைக்கு வருமானால் நாளை சாலையில் இருக்கும் மைல் கல்லிற்கெல்லாம் பட்டை குங்குமம் பூசி விளக்கேற்றமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்திரவாதம். அப்படி ஏற்றினால் சாலை வழி எப்படி புரியும்.

திருக்கோவில் ஸ்தானிகப்பட்டர் தனது கடிதம் வாயிலாக, அறநிலைய ஆணையருக்கு ஒரு தகவல் தந்துள்ளார். அதில் கார்த்திகை தீபத்தன்றுதான் தீபம் ஏற்றப்படும். தீபம் மூல விக்கிரகத்தின் மேலே இருக்கும் பிள்ளையார் கோவிலில் ஏற்றிவிட்டோம். மற்ற நாட்களில் தீபம் ஏற்றுவது நடைமுறைக்கு ஆபத்தானது என்று கூறினார். அதேபோல் பூஜை முடிந்துவிட்டது என பூஜாரியும் கூறிவிட்டார்.



கவிஞர்
**காசிமுத்து மாணிக்கம்**
கழக வர்த்தகர் அணிச் செயலாளர்

இதே நீதிபதி, வயலூர் முருகன் கோவிலில் பிராமணர்கள் சாப்பிட்ட எச்சில் இலையில் பிராமணர் அல்லாதோர் உருண்டு புரளவேண்டும் என மனித நாகரிகம் அற்று தீர்ப்பு கூறினார். மற்ற இரண்டு நீதிபதிகளின் மாறுபட்ட கருத்துக்களால் மனித கௌரவம் காப்பாற்றப்பட்டது.

“ராமர், ராமர்” என்று தேர்தலுக்காக முழக்கம் போட்டீர்கள். உத்திரபிரதேசம் முழுவதும் எதிரொலிக்கும் என்று கருதினீர்கள். 80 சீட்டில் இந்தியா கூட்டணி 42 சீட்டும். பா.ஜ.க.வுக்கு 38 சீட்டும்தான் வெற்றி கிடைத்தது. அயோத்தியிலேயாவது பா.ஜ.க. வென்றதா என்றால், அதுவும் இல்லை. பொது தொகுதியான அயோத்தியில் ஒரு தலித் தொண்டர் இந்தியா கூட்டணியில் நின்று வெற்றி பெற்றுவிட்டார். அயோத்தியில் பா.ஜ.க. தோல்வி அடைந்தது.

நீதிபதிகளை மிரட்டுவதும், ஆளுநர் ஆக்குவதும் வழக்கமானதால் எல்லை மீறி நீதிபதிகள் தீர்ப்பு தருகிறார்கள்.

நீதிபதிகளுக்கு “நீதி சொல்லும்” புனித வேலை மட்டும்தான். தவறான தீர்ப்பு ஆனாலும், அதை அமுல்படுத்தம் வேலை மாநில அரசுக்கே தவிர நீதிபதிக்கே கிடையாது. தடி எடுத்தவன் தண்டல்காரன் ஆக முடியாது.

கலெக்டர் மகளுக்கு ஜாதி சான்றிதழ், கிராம நிர்வாக அலுவலர்தான் தர வேண்டும். கலெக்டரே தன் மகளுக்கு ஜாதி சான்றிதழ் வழங்க முடியாது.

தான் சொன்ன தீர்ப்பை நடைமுறைப்படுத்த சி.ஐ.எஸ்.எப்பை நீதிபதி அனுப்பியிருக்க கூடாது. நீதிபதிக்கு யார் அந்த அதிகாரத்தை கொடுத்தது?

திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றுவதும், காவடி எடுப்பதும் நமது வேலை, எச். இராஜாவும், பாண்டேவும் காவடி எடுப்பார்களா? உங்கள் தாத்தா எடுத்தாரா?

அறந்தாங்கியை அடுத்த சுப்பிரமணியபுரத்தில் எனது தாத்தா தேர் காவடி. வேல் காவடி எடுத்தார். எச். இராஜவோ, பாண்டேவோ தேர் காவடி எடுக்கவேண்டாம். நாக்கில் வேல் குத்தியிருப்பார்களா?

வைணவர்களுக்கும், சைவர்களுக்குமான சண்டையை காஞ்சிபுரத்தில் நிறுத்திவிட்டு முருகனை கும்பிட எச். இராஜா கூட்டம் வரட்டும்.

தமிழ்நாட்டில் ஒருவேளை தீபம் கூட ஏற்றாத 2500 கோவில்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அந்தக் கோவிலுக்கு ஆண்டுக்கு 2 லட்சம் ரூபாய் வீதம் 50 கோடி கொடுத்து. கோவிலுக்கே முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சி விளக்கேற்றுகிறது. ஆனால் சங்கிக் கூட்டம் அங்கே தீபம் ஏற்றப் போவதில்லை.

கோவில்களின் ஏழு ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பு சொத்துகளை மீட்டு கோவிலுக்கே தருவதுடன். அர்ச்சகர்களுக்கு மாத ஊதியம், அர்ச்சகர்களின் குழந்தைகளுக்கு படிப்பு செலவுக்கு உதவித்தொகை செய்கிறது.

தளபதி, இந்துக்களின் கோவில்களை கவனமாக பார்த்துக் கொள்ளும் அதே நேரத்தில் மதநல்லிணக்கத்தோடு மற்ற மதத்தினரின் வழிபாட்டையும் பாதுகாத்து வருகிறார். என்பதனாலேயே ஓட்டுக்காக செய்கிறார் என கொச்சைப்படுத்தக்கூடாது.

நாகூர் தர்காவுக்கு மராட்டிய மன்னன் சந்தனக்கூடு கட்டிக் கொடுத்தாரே; ஓட்டுக்காகவா?

திருப்பத்தூர் தர்காவுக்கு மருது பாண்டியர் நன்கொடை கொடுத்தனரே; அவர்கள் என்ன தேர்தல் வாக்குக்காகவா செய்தனர்?

வைகையில் தர்காவுக்கு பாண்டிய மன்னன் 15,000 பவுன் கொடுத்ததும் வாக்கு வங்கிக்கா?

அந்த வழியில் வந்தவர்தானே தளபதி.

தளபதியும் மன்னர்கள்போல் ‘இந்து, இந்து அல்லாதோர்’ எனக்கருதாமல் ‘எல்லோரும் என் சகோதர சகோதரிகள்’ என வாழ்பவர் தளபதி. அதனால் தான் 144 தடை உத்தரவு போட்டு அமைதியை ஏற்படுத்தினார்.

தி.மு.க. அரசு முருகன் மனதை புண்படுத்தியிருந்தால், முருகனின் அறுபடை வீடுகளில் திருப்பரங்குன்றத்தை தவிர மற்ற 5 இடங்களில் தி.மு.க.தான் வென்றிருக்க முடியுமா?

திருத்தணியில் தி.மு.க. மாவட்டச் செயலாளர் எஸ். சந்திரன் எம். எல்.ஏ.வாக வெற்றி பெற்றார். பழனியில் மாவட்ட செயலாளர் இ.பெ.செந்தில் குமார், எம்.எல்.ஏ.வாக வென்றார். சுவாமிமலையில் கூட்டணிக் கட்சியில் சகோதரர் ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. வென்றார். பழமுதிர்சோலையில் அமைச்சர் மூர்த்தி வென்றார்.

அதனால்தான் மீண்டும் சொல்வோம், நாம் மீண்டிட, மீண்டும் முடிசூடும் நாள் தளபதிக்கு நெருங்குகிறது.

### ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு நடப்பு நிதியாண்டில் தர வேண்டிய

# பேரிடர் நிவாரண நிதி ரூ.826.5 கோடியை உடனடியாக வழங்கிடுக!

## நாடாளுமன்றத்தில் – ஈரோடு கே.இ.பிரகாஷ் வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச. 13 - தமிழ்நாட்டிற்கான பேரிடர் நிவாரண நிதியை வழங்காமல் வஞ்சிக்கும் ஒன்றிய அரசு நடப்பு நிதியாண்டில் வர வேண்டிய ரூ.826.5 கோடியை உடனடியாக வழங்க உறுதியளிக்க வேண்டும் என நாடாளுமன்றத்தில் எம்.பி. கே.இ.பிரகாஷ் வலியுறுத்தினார்.



நாடாளுமன்றத்தில் ஜீரோ ஹவரில் உரையாற்றிய ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ், தமிழ்நாட்டில் கடுமையான வடகிழக்குப் பருவமழை மற்றும் புயல் அபாயம் நிலவி வரும் சூழலில், மாநிலத்திற்கான பேரிடர் நிவாரண நிதியை ஒன்றிய அரசு தாமதப்படுத்தி வருவது மிகவும் கவலைக்குரிய செயல் என்று கண்டனம் தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் கடலோரங்கள், டெல்டா மற்றும் மாநகரப் பகுதிகளில், வெள்ள அபாய எச்சரிக்கை, புயல் மேலாண்மை அமைப்புகள் போன்ற பல முன்னெடுப்புகளை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மேற்பார்வையில்,துணைமுதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதி நிதிகள் சிறப்பாக செய்து வருவதாக அவர் குறிப் பிட்டார்.

இந்த நிலையில், தமிழ்நாட்டுக்கு உரிய நிதியை வழங்குவதில் ஒன்றிய அரசு மீண்டும் மீண்டும் தாமதம் செய்வதாக அவர் குற்றம் சாட்டினார்.

2021 முதல் 2025 வரை தனது சொந்த நிதியில் இருந்து ரூ.9,170.48 கோடி செலவிட்டு பேரிடர் பணிகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டது, மாநிலத்தின் மீது எடுத்துக்கொண்ட அர்ப்பணிப்பைக் காட்டுவதாக அவர் கூறினார். மேலும், இது ஒன்றிய அரசு அளித்த நிதியை விட 2 மடங்கு அதிகம் என்பதையும் அவர் சபையில் பதிவு செய்தார்.

நடப்பு நிதியாண்டில் மாநில பேரிடர் நிவாரண நிதியான SDRFல் இருந்து ரூ.661.2 கோடி, மாநில பேரிடர் தணிப்பு நிதியான SDMFல் இருந்து ரூ.165.3 கோடி என மொத்தம் ரூ.826.5 கோடி நிதியை ஒன்றிய அரசு இதுவரை வழங்கவில்லை என அவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு ஆண்டும் சென்னை, தூத்துக்குடி உள்ளிட்ட கடற்கரைப் பகுதிகள் மிகப் பலத்த சேதாரத்தை சந்தித்து வரும் நிலையில், ஒன்றிய அரசு நிதியை தாமதித்து தமிழ்நாட்டை வஞ்சிப்பதாக அவர் கண்டனம் தெரிவித்தார்.

மழைக்கு முன்பாக நிதியை தடுத்து வைப்பது நியாயமற்றது மற்றும் ஆபத்தானது என்ற நிபுணர்களின் எச்சரிக்கையை சுட்டிக்காட்டி, தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய ரூ.826.5 கோடி நிதியை உடனடியாக வழங்க வேண்டும் என்று ஒன்றிய அரசை வலியுறுத்தி, அவர் உரையை நிறைவு செய்தார்.